**உதவி அமர்வு நீதிமன்றம், சீர்காழி**
**முன்னிலை: திருமதி. S. மும்தாஜ், B.Sc.,B.L.,**
**உதவி அமர்வு நீதிபதி, சீர்காழி**

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 16–ஆம் நாள் வியாழக்கிழமை

**அமர்வு வழக்கு எண்.67/2022**

**CNR No. TNMY06-001264-2022**

(சீர்காழி, நீதித்துறை நடுவர் அவர்களால் முதல்நிலை பதிவேடு வழக்கு எண்.03/2022 ன்படி மேல் விசாரணைக்காக அனுப்பி வைக்கப்பட்டது)

**திருவெண்காடு காவல் நிலைய குற்ற எண்.319/2020**

| வ. எண் | தலைப்பு | | விவரங்கள் |
|---|---|---|---|
| 1 | காவல் நிலையம் மற்றும் குற்ற எண். | : | திருவெண்காடு காவல் நிலைய குற்ற எண்.319/2020 |
| 2 to 7 | எதிரிகளின் விபரங்கள்<br>(பெயர், தந்தை பெயர், தொழில்,<br>இருப்பிடம் & முகவரி | : | 1. நந்தன் (எ) முருகானந்தம்,<br>வயது 46/2020<br>த/பெ. நாராயணசாமி<br>மேலத்தெரு, சீப்புலியூர்.<br><br>2. ஜெயபால் வயது 54/2020,<br>த/பெ. கனகசபாபதி,<br>இளையமதுகூடம். **(இறந்தார்)**<br><br>3. அம்சராஜ், வயது 36/2020,<br>த/பெ. கேசவன்,<br>மேலவெளித்தெரு,<br>இளையமதுகூடம். **(இறந்தார்)**<br><br>4. இலக்கியராஜ், வயது 31/2020,<br>த/பெ. கோவிந்தராஜ்<br>மேலத்தெரு, நாங்கூர்.<br><br>5. கனி (எ) தயாகரன், வயது 45/2020,<br>த/பெ. சுப்ரமணியன்<br>உக்கடை, திருவெண்காடு.<br><br>6. சுந்தரபாண்டியன் (எ) பாண்டியன்<br>வயது 28, |

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.16 18:09:34 +0530

| | | | |
|---|---|---|---|
| | | | த/பெ. கல்யாணசுந்தரம்,<br>சன்னானோடை,<br>திருவெண்காடு.<br><br>7. விஜய், வயது 32/2020,<br>த/பெ. வீரையன்,<br>அண்ணா நகர்<br>சட்டநாதபுரம், சீர்காழி தாலுக்கா. |
| 8 | குற்றம் நடைபெற்ற நாள் | : | 24.07.2020 |
| 9 | புகார் கொடுத்த நாள் | : | 24.07.2020 |
| 10 | எதிரிகளை கைது செய்த நாள் | : | 1 வது எதிரி 25.07.2020<br><br>2 மற்றும் 3 வது எதிரிகள் கைது செய்யப்படவில்லை.<br><br>4 வது எதிரி 28.07.2020<br>5 வது எதிரி 27.07.2020<br>6 வது எதிரி 16.09.2020<br>7 வது எதிரி 09.09.2020 |
| 11 | எதிரிகளை பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | : | 1 வது எதிரி 27.08.2020.<br><br>2 மற்றும் 3 வது எதிரிகள்<br>Surrender –16.09.2020.<br>4 வது 21.09.2020 திருவெண்காடு காவல் நிலைய குற்ற எண்.758/2021 என்ற வழக்கில் 17.12.2021 அன்று கைது செய்யப்பட்டு திருச்சி மத்திய சிறையில் சிறை வாசியாக இருந்து வருகிறார்.<br>5 வது எதிரி 27.08.2020<br>6 வது எதிரி 09.10.2020<br>7 வது எதிரி 22.09.2020 |
| 12 | விசாரணை நீதிமன்றம் முதலேற்பு செய்த நாள் | : | 06.08.2024 |
| 13 | சாட்சி விசாரணை தொடங்கிய நாள் | : | 06.02.2025 |
| 14 | சாட்சி விசாரணை நிறைவுற்ற நாள் | : | 02.04.2026 |
| 15 | தீர்ப்பு வழங்கிய தேதி | : | 16.04.2026 |

MUMTAJ

Digitally signed by MUMTAJ
Date: 2026.04.16 18:09:39 +0530

| | | | |
|---|---|---|---|
| 16 | தீர்ப்பின் நகல் வழங்கிய தேதி | : | 16.04.2026 |
| 17 | காலதாமத்திற்கான காரணம் | : | --- |
| 18. | காவல் துறையினரால் குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றசாட்டுகள் | | U/S. 147, 148, 294(b), 307, 506(ii), 326 r/w 149 IPC |
| 19 | எதிரிகளின் பதிலுரை | | குற்றவாளி இல்லை |
| 20 | நீதிபதியின் தீர்மானம் மற்றும் தீர்ப்புரை பற்றிய விபரம் | | **முடிவாக,** 1வது எதிரி இத.ச. பிரிவுகள் 147, 148, 294(b), 307, 326-ன் கீழும், 4 முதல் 7 எதிரிகள் இ.த.ச. பிரிவுகள் 147, 148 294(b), 307 r/w 149, 326 r/w 149 மற்றும் 506(ii)ன் கீழும் குற்றவாளி இல்லை என முடிவு செய்து ஆஜர் 1, 4 முதல் 7 எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 235(1)ன் கீழ் இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கின் 2 மற்றும் 3வது எதிரிகள் இறந்துவிட்டதால் அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் அற்று போய்விட்டன.<br>இவ்வழக்கில் SCP.No.09/2025 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள சா.பொ.1 மற்றும் சா.பொ.2 சுமார் 45 செ.மீ. நீளமுள்ள அரிவாள் -2 (இரண்டு) மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கு மயிலாடுதுறை முதன்மை உதவி அமர்வு நீதிமன்றத்தால் அமர்வு வழக்கு எண்.126/2018 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு மாண்புமிகு நாகப்பட்டினம் முதன்மை அமர்வு நீதிமன்றத்தின் 08.11.2022ம் தேதியிட்ட உத்தரவு எண். A.No.332/22-ன்படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, இவ்வழக்கு 10.02.2026

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.16 18:09:44 +0530

அன்று என் முன்பு இறுதியான விசாரணைக்கு வந்த போது அரசுக்காக கூடுதல் அரசு தரப்பு வழக்கறிஞர் திரு. எஸ்.ஜே. ஜெயந்தி அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 4 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. A. சரவணன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**தீர்ப்புரை**

1. அரசுத்தரப்பு வழக்கானது கடந்த 24.07.2020 தேதியன்று 2 மற்றும் 3 வது எதிரிகள் ஜெயபால், அம்சராஜ் இருவரும் இளையமதுகூடம் மேலவெளியில் உள்ள தங்களுக்குச் சொந்தமான இடத்தில் மணல் எடுத்தும் கொண்டிருந்தபோது 1 முதல் 5 வரையான சாட்சிகள் அங்கு சென்று சாட்சி– 2 என்னுடைய அனுமதி மற்றும் வட்டாட்சியர் மற்றும் காவல்துறை அனுமதியில்லாமல் எப்படி மணல் எடுக்கலாம் என்று கேட்டபோது சாட்சி– 2 க்கும், 2 மற்றும் 3 எதிரிகளுக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டு, சாட்சி 2–யை எதிரிகள் பயங்கர ஆயுதங்களுடன் தாக்க வந்தபோது சாட்சி–1 கோபாலாகிருஷ்ணன் இரு தரப்பினரையும் சமாதானம் செய்து அனுப்பி வைத்ததாகவும், இந்நிலையில் சுமார் 12.45 மணிக்கு அங்கு நின்றிருந்த சாட்சி–1 தனது இருசக்கர வாகனத்தை எடுத்து செல்ல போன போது 1 முதல் 7 எதிரிகளும் சட்ட விரோதமாக ஒன்று கூடி கையில் பயங்கர ஆயுதங்களுடன் சாட்சி1 யை கொலை செய்ய வேண்டும் என்ற பொதுவான நோக்கத்தோடு சாட்சி–1 யை பார்த்து எதிரிகள் ஏய் குச்சிகாரி மவனே, தேவடியா மவனே என்று காமகுரோதமாக திட்டியும், 1 வது எதிரி சாட்சி–1 யை தனது அத்தான் ஜெயபாலுவிடம் ஏன் வம்பு வளர்க்கிறாய் என கேட்டு, இத்தோடு தொலைந்து போடா என்று சொல்லி கொண்டே அவர் கையில் வைத்திருந்த அருவாளால் சாட்சியின் தலையில் வெட்டியபோது, சாட்சி–1 விலகவே அந்த வெட்டு சாட்சி–1 ன் இடது பக்க காதில் வெட்டி கொடுங்காயத்தை ஏற்படுத்தியும், அப்போது இருந்த 3 வது எதிரி சாட்சி–1 யை செத்துபோடா என்று சொல்லி தன் கையில் வைத்திருந்த அருவாளால் இடது பக்க கழுத்தில் வெட்டி கொடுங்காயத்தை ஏற்படுத்தியும், அப்போது சாட்சி–1 சத்தம் போட்டு

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.16 18:09:51 +0530

சாட்சி–3 மற்றும் சாட்சி–5 ஆகியோர் ஓடி வந்த போது 2 முதல் 7 எதிரிகளும் சாட்சி–1யை பார்த்து உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என கொலை மிரட்டல் விடுத்தும், மேலும் சாட்சி–1யை 1வது எதிரி தலையில் வெட்டியபோது விலகாமல் இருந்திருந்தால் அந்த வெட்டு சாட்சி–1ன் கழுத்தில் பட்டு சாட்சி–1 இறந்திருக்க கூடும் என்றும், எனவே மேற்படி குற்றத்திற்காக 1 வது எதிரியின் மீது இதச. பிரிவுகள் 147, 148, 294(பி), 326, 307 ன் கீழும், 3 வது எதிரியின் மீது இதச. பிரிவுகள், 147, 148, 294(பி), 326, 307, 506(2) ன் கீழும், 2 மற்றும் 4 முதல் 7 வரையிலான எதிரிகள் மீது இதச.பிரிவுகள் 147, 148, 294(பி), 506(2) r/w ன் 149ன் கீழும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக எதிரிகள் மீது திருவெண்காடு காவல் நிலைய, காவல் ஆய்வாளர் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. சீர்காழி, நீதித்துறை நடுவர் நீதிமன்றம் மேற்படி வழக்கினை தமது கோப்பில் மு.ப.வ.எண்.3/2022 ஆக எடுத்துக்கொண்டு, வழக்கில் எதிரிகள் முன்னிலையானவுடன் வழக்காவணங்களின் நகல்களை கு.வி.மு.ச.பிரிவு 209(அ)ன் கீழ் வழங்கி பரிசீலனை செய்கையில் எதிரிகள் மீதான குற்றங்கள் அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்க குற்றங்களாக இருந்ததால் இவ்வழக்கினை கு.வி.மு.ச. பிரிவு 209(அ)ன்படி மயிலாடுதுறை முதன்மை உதவி அமர்வு நீதிமன்றத்திற்கு மேல் விசாரணைக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கு மயிலாடுதுறை முதன்மை உதவி அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு மாண்புமிகு நாகப்பட்டினம் முதன்மை அமர்வு நீதிமன்றத்தின் 08.11.2022ம் தேதியிட்ட உத்தரவு எண். A.No.332/22–ன்படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

3. நீதிமன்றத்தில் 1, 4 முதல் 7 எதிரிகள் முன்னிலையானவுடன் 1வது எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 147, 148, 294(b), 307, 326–ன் கீழும், 4 முதல் 7 வது எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 147, 148 294(b), 307 r/w 149, 326 r/w 149 மற்றும் 506(ii)ன் கீழும் குற்றச்சாட்டுக்கள் வனைந்து தமிழில் படித்து காண்பித்து விளக்கிக்கூறி வினவியபோது எதிரிகள் குற்றத்தை மறுத்துள்ளார்கள். ஆகையால் வழக்கு சாட்சி விசாரணைக்காக உத்தரவிடப்பட்டு அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.7 வரையிலான

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.16 18:09:55 +0530

சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. இவ்வழக்கில் சான்று பொருட்கள் சா.பொ.1 மற்றும் ச.பொ.2 குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் 2 மற்றும் 3 வது எதிரிகள் இறந்து விட்டதால் அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் அற்று போய்விட்டன.

4. <u>அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு</u>

(i) அரசு தரப்பு சாட்சியான அ.சா.1 கோபாலகிருஷ்ணன் அவரது சாட்சியத்தில் அவர் தற்போது இளையமதுகூடம் சீர்காழியில் வசித்து விவசாய வேலை செய்து வருவதாகவும், ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், சுமார் 5, 6 வருடங்களுக்கு முன்பு விதை நெல் வாங்குவதற்காக வெளியே போயிருந்தேன் என்றும், அங்கு பிச்சனை நடந்துக் கொண்டிருந்தது என்றும், தன்னிடம் கையெழுத்துக் கேட்டார்கள் போட்டேன் என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் அரிவாள் (2) தனக்கு அடையாளம் தெரியவில்லை என்றும், புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், போலிசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

(ii) அரசு தரப்பு சாடசியான அ.சா.2 ஹரிகிருஷணன் அவரது சாட்சியத்தில் அவர் தற்போது ஆலங்காட்டில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருவதாகவும், ஆஜர் எதிரியை தெரியாது என்றும், இந்த வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலிசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

(iii) அரசு தரப்பு சாடசியான அ.சா.3 சண்முகம் அவரது சாட்சியத்தில் அவர் தற்போது இடையமதுக்கூடம் ஐயனார் கோவில் தெருவில் வசித்து விவசாய வேலை செய்து வருவதாகவும், இந்த வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலிசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.16 18:10:01 +0530

(iv) அரசு தரப்பு சாட்சியான அ.சா.4 மகேந்திரன் மற்றும் அ.சா.5 அபிமணி தங்களது சாட்சியத்தில் அவர் தற்போது இளையமதுக்கூடத்தில் வசித்து விவசாய வேலை செய்து வருவதாகவும், தங்களிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசர் உள்ள கையெழுத்து தங்களுடையதல்ல என்றும், போலிசார் தங்களை விசாரணை செய்யவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்கள்.

(v). அரசு தரப்பு சாட்சியான அ.சா.6 பாண்டியன் தம்முடைய சாட்சியத்தில் அவர் தற்போது இளையமதுக்கூடத்தில் வசித்து விவசாய வேலை செய்து வருவதாகவும், தன்னிடம் காண்பிக்கப்படும் முதல் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள சாட்சி கையெழுத்து தன்னுடையதல்ல என்றும், தங்கராசு மகன் கனகராஜ் என்வரை தெரியும் என்றும், போலிசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

(vi) அரசு தரப்பு சாட்சியான அ.சா.7 கழனியப்பன் காவல் ஆய்வாளர் தனது சாட்சியத்தில் அவர் தற்போது திருவெண்காடு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருவதாகவும், கடந்த 24.07.2020ம் தேதி 16.00 மணிக்கு திருவெண்காடு காவல் நிலைய உதவி ஆய்வாளர் மதி என்பவர் நிலைய பொருப்பில் இருந்த போது இளையமதுக்கூடம் அய்யனார் கோவிலை சேர்ந்த பரமசிவம், கோபாலகிருஷ்ணன் என்பவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று நிலைய குற்ற எண். 319/2020 U/s. 147, 148, 294(b), 307, 506(ii) IPC ன் கீழ் வழக்கு பதிவு செய்து ஆய்வாளர் விசாரணைக்கு எடுத்துக் கொண்டதாகவும், புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும், இவ்வழக்கின் உதவி ஆய்வாளர் மற்றும் ஆய்வாளரின் கையெழுத்து நன்கு தெரியும் என்றும், இவ்வழக்கினை ஆய்வாளர் பாஸ்காரன் என்பவர் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 17.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மகேந்திரன், அபிமணி, ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் அ.சா.ஆ. 4 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 தயார் செய்ததாகவும், சாட்சிகள் கோபாலகிருஷ்ணன், அகோரம், ஹரிகிருஷணராஜ், அபிமணி, சண்முகம், ராஜா, மகேந்திரன், வேல்முருகன் ஆகியோர்களை முன்னிலையில் விசாரணை செய்து

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.16 18:10:06 +0530

தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், இவ்வழக்கின் சம்பவம் உண்மை என தெரியவரவே வழக்கின் எதிரி நந்தன் என்பவரை 25.07.2020 ம் தேதி காலை 8.30 மணிக்கு நாங்கூர் பஸ்டாப் அருகே குற்ற காரணம் கூறி கைது செய்ததாகவும், கைது விபரத்தை அவரது உறவினர்களுக்கு தெரியபடுத்தியும், எதிரியை காவல் நிலையம் கொண்டு வந்து எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றும், சாட்சிகள் கனகராஜ், பாண்டியன் ஆகியோர்கள் முன்னிலையில் எதிரியை விசாரிக்க தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூல்தை பதிவு செய்தும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி உச்சிபாளையம் முனியய்யா கோயில் ஆலமரத்தடியில் மறைத்து வைத்திருந்து சுமார் 45 செ.மீ நீளமுள்ள அருவாள் 2 யை மறைத்து வைத்திருந்ததை எடுத்து ஆஜர் செய்ததை சாட்சிகள் முன்னிலையில் கைப்பறுதல் மகசரில் கைப்பற்றி உள்ளதாகவும், அவை சான்று பொருட்கள் 1 மற்றும் 2 ஆகவும், ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்ப்டட பகுதி மற்றும் கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.6, 7 ஆகவும், படிவம் 95 அ.சா.ஆ.8 ஆகவும், சாட்சிகள் பாண்டியன், கனகராஜ் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பெற்றதாகவும், இவ்வழக்கின் எதிரி கனி என்பவரை 27.07.2020 ம் தேதி 12.30 மணிக்கு நாங்கூர் முக்குட்டில் வைத்து கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி உள்ளதாகவும், இவ்வழக்கின் மற்றொரு எதிரியான இலக்கியராஜ் என்பவரை 28.07.2020 ம்தேதி 16.30 மணிக்கு தென்னாம்பட்டினம் பாடசாலையில் குற்ற காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி உள்ளார் என்றும், இவ்வழக்கின் மற்றொரு எதிரியான விஜய் என்பவரை 09.09.2020 ம் தேதி காலை 9.00 மணிக்கு சீர்காழி சட்டநாதபுரம் ரவுன்டானவில் வைத்து கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி உள்ளதாகவும், இவ்வழக்கின் எதிரி சுந்தரபாண்டியன் என்பவரை 16.09.2020 தேதி 16.30 மணிக்கு சன்னானோடை மாரியம்மன் கோயில் அருகே கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி உள்ளதாகவும், இவ்வழக்கில் காயம் பட்டவர்களுக்கு சிகிச்சை அளித்த சீர்காழி அரசு மருத்துவமனை மருத்துவர் கார்திகேயன் என்பவரை அதன் பிறகு பொறுப்பேற்ற ஆய்வாளர் ராஜேஷ் என்பவர் விசாரணை செய்து காயம் கொடுங்காயம்

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.16 18:10:10 +0530

என சான்று வழங்கியதாகவும், காயச்சான்று அ.சா.ஆ.9 ஆகவும், இவ்வழக்கினை பதிவு செய்த மதி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும், இவ்வழக்கின் சட்ட பிரிவுகளை மாற்றம் செய்து பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.10 ஆகவும், இவ்வழக்கின் புலன் விசாரணையினை முடித்து 11.11.2020 ம் தேதி 1 முதல் 7 எதிரிகள் மீது ஆய்வாளர் சட்டபிரிவுகள் U/s. 147, 148, 294(b), 307, 506(ii), 326 IPC ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார்.

**5.** அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து 1, 4 மற்றும் 7 எதிரிகளுக்கு பாதகமாக தோன்றும் அம்சங்களை தொகுத்து கு.வி.மு.ச.பிரிவு 313(1)(ஆ)–ன்படி கேள்வி எழுப்ப எதிரிகள் அவற்றை பொய் சாட்சிகள் என மறுத்தும், வழக்கு குறித்து பொய் வழக்கு என தெரிவித்தும் தமது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லையென தெரிவித்தனர். இவ்வழக்கில் 2 மற்றும் 3 வது எதிரிகள் வழக்கு நிலுவையில் இறந்துவிட்டதால் அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் அற்றுபோய்விட்டன.

**6. <u>இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை:</u>**

1 வது எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 147, 148, 294(b), 307, 326–ன் கீழும், 4 முதல் 7 வது எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 147, 148 294(b), 307 r/w 149, 326 r/w 149 மற்றும் 506(ii)ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**<u>7. தீர்வு:–</u>**

அரசுத்தரப்பு வழக்கானது கடந்த 24.07.2020 தேதியன்று இறந்துபோன 2 மற்றும் 3 வது எதிரிகள் ஜெயபால், அம்சராஜ் இருவரும் இளையமதுகூடம் மேலவெளியில் உள்ள தங்களுக்குச் சொந்தமான இடத்தில் மணல் எடுத்தும் கொண்டிருந்தபோது 1, 4, 5 வரையான சாட்சிகள் அங்கு சென்று அ.சா.2 என்னுடைய அனுமதி மற்றும் வட்டாட்சியர் மற்றும் காவல்துறை அனுமதியில்லாமல் எப்படி மணல் எடுக்கலாம் என்று கேட்டபோது அ.சா.2 க்கும், இறந்துபோன 2 மற்றும்

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.16 18:10:15 +0530

3 எதிரிகளுக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டு, அ.சா.2 யை 1, 4 முதல் 7 மற்றும் இறந்துபோன 2, 3 எதிரிகள் பயங்கர ஆயுதங்களுடன் தாக்க வந்தபோது அ.சா.1 கோபாலாகிருஷ்ணன் இரு தரப்பினரையும் சமாதானம் செய்து அனுப்பி வைத்ததாகவும், இந்நிலையில் சுமார் 12.45 மணிக்கு அங்கு நின்றிருந்த அ.சா.1 தனது இருசக்கர வாகனத்தை எடுத்து செல்ல போன போது 1, 4 முதல் 7 எதிரிகளும், இறந்துபோன 2, 3 எதிரிகள் சட்ட விரோதமாக ஒன்று கூடி கையில் பயங்கர ஆயுதங்களுடன் அ.சா.1 யை கொலை செய்ய வேண்டும் என்ற பொதுவான நோக்கத்தோடு அ.சா.1 யை பார்த்து எதிரிகள் காமகுரோதமாக திட்டியும், 1 வது எதிரி அ.சா.1 யை எனது அத்தான் ஜெயபாலுவிடம் ஏன் வம்பு வளர்க்கிறாய் என கேட்டு, இத்தோடு தொலைந்து போடா என்று சொல்லி கொண்டே அவர் கையில் வைத்திருந்த அருவாளால் சாட்சியின் தலையில் வெட்டியபோது, அ.சா.1 விலகவே அந்த வெட்டு அ.சா.1 ன் இடது பக்க காதில் வெட்டி கொடுங்காயத்தை ஏற்படுத்தியும், அப்போது இருந்த இறந்து போன 3 வது எதிரி அ.சா.1 யை செத்துபோடா என்று சொல்லி தன் கையில் வைத்திருந்த அருவாளால் இடது பக்க கழுத்தில் வெட்டி கொடுங்காயத்தை ஏற்படுத்தியும், அப்போது அ.சா.1 சத்தம் போட்டு அ.சா.3 மற்றும் பட்டியல் சாட்சி–5 ஆகியோர் ஓடி வந்த போது 4 முதல் 7 எதிரிகளும், இறந்துபோன 2, 3 எதிரிகளும் அ.சா.1 யை பார்த்து உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என கொலை மிரட்டல் விடுத்தும், மேலும் அ.சா.1 யை 1 வது எதிரி தலையில் வெட்டியபோது விலகாமல் இருந்திருந்தால் அந்த வெட்டு அ.சா.1 ன் கழுத்தில் பட்டு அ.சா.1 இறந்திருக்க கூடும் என்றும், எனவே மேற்படி குற்றத்திற்காக 1 வது எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 147, 148, 294(b), 307, 326–ன் கீழும், 4 முதல் 7 வது எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 147, 148 294(b), 307 r/w 149, 326 r/w 149 மற்றும் 506(ii)ன் கீழான குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளன. இவ்வழக்கில் 2 மற்றும் 3 வது எதிரிகள் இறந்துவிட்டதால் அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் அற்றுபோய்விட்டன.

8. அரசு தரப்பு வழக்கை நிரூபிக்கும் பொருட்டு இவ்வழக்கின் புகார்தாரர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தம்முடைய நீதிமன்ற சாட்சியத்தில் தான்

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.16 18:10:19 +0530

சீர்காழியில் வசித்து வருவதாகவும், விவசாய வேலை செய்து வருவதாகவும், ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், சுமார் 5, 6 வருடங்களுக்கு முன்பு விதை நெல் வாங்குவதற்காக வெளியே போயிருந்ததாகவும், அங்கு பிரச்சனை நடந்துக்கொண்டிருந்தது என்றும், தன்னிடம் கையெழுத்துக் கேட்டார்கள் போட்டேன் என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் அரிவாள் (2) தனக்கு அடையாளம் தெரியவில்லை என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும் சாட்சியமளித்து பிறழ்சாட்சியாகியுள்ளார். வழக்கு குற்ற சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.2 தம்முடைய சாட்சியத்தில் தான் தற்போது ஆலங்காட்டில் குடியிருப்பதாகவும், விவசாய வேலை செய்து வருவதாகவும், ஆஜர் எதிரியை தெரியாது என்றும், வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றும், போலிசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும் சாட்சியமளித்து பிறழ்சாட்சியாகியுள்ளார்.

9. இவ்வழக்கு குற்ற சம்பவத்தை கேள்விப்பட்ட சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.3 தம்முடைய சாட்சியத்தில் தான் தற்போது இளையமதுகூடம் ஐயனார் கோவில் தெருவில் வசித்து வருவதாகவும், விவசாய வேலை செய்து வருவதாகவும், இவ்வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலிசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும் சாட்சியமளித்து பிறழ்சாட்சியாகியுள்ளார். இவ்வழக்கில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபட சாட்சிகளாக அ.சா.4 மற்றும் அ.சா.5 விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் தங்களுடைய சாட்சியத்தில் பார்வை மகரில் உள்ள கையெழுத்து தங்களுடையது அல்ல என்றும், போலிசார் தங்களை விசாரணை செய்யவில்லை என்றும் சாட்சியமளித்து பிறழ்சாட்சியாகியுள்ளார்கள். முதல் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.6 தம்முடைய சாட்சியத்தில் தான் இளையமதுகூடத்தில் வசிப்பதாகவும், விவசாய வேலை செய்து வருவதாகவும், தன்னிடம் காண்பிக்கப்படும் முதல் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள சாட்சி

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.16 18:10:23 +0530

கையெழுத்து தன்னுடையதல்ல என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்து பிறழ்சாட்சியாகியுள்ளார்.

10. இவ்வழக்கில் கூடுதல் சாட்சியாக விசாரிக்கப்பட்ட திருவெண்காடு காவல் நிலைய காவல் ஆய்வாளர் அ.சா.7 தம்முடைய சாட்சியத்தில் இவ்வழக்கின் புகார்தாரரிடமிருந்து புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 யை பெற்று முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 பதிவு செய்தது குறித்தும், வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் அ.சா.ஆ.4 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 தயார் செய்தது குறித்தும், 1 வது எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்று அதன் அடிப்படையில் சான்று பொருட்கள் ச.பொ.1 மற்றும் ச.பொ.2 யை கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.7 தயார் செய்து, படிவம் 95 அ.சா.ஆ.8 மூலம் நீதிமன்றம் அனுப்பி வைத்தது குறித்தும், இவ்வழக்கில் காயம் பட்ட அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவரிடம் காயச்சான்று அ.சா.ஆ.9 பெற்றது குறித்தும், இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை மாற்றம் செய்து பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.10 தயார் செய்தது குறித்தும், இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து இறுதியறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.7 தம்முடைய குறுக்கு விசாரணை சாட்சியத்தில் இவ்வழக்கை தான் நேரடியாக விசாரணை செய்யவில்லை என்றும், தன் சக அதிகாரி தயார் செய்த ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிப்பதாகவும் கூறியுள்ளார்.

11. இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை ஒருசேர பரிசீலனை செய்கையில் புகார்தாரரான அ.சா.1 ன் சாட்சியம் அரசு தரப்பை நிரூபிக்கும் வகையில் அமையாமல் புகார் வாக்குமூலத்தில் உள்ள தன்னுடைய கையெழுத்து 5, 6 வருடங்களுக்கு முன்பு விதை நெல் வாங்குவதற்காக சென்றபோது, அங்கு பிரச்சனை நடந்து கொண்டிருந்ததென்றும், தன்னிடம் கையெழுத்துக் கேட்டார்கள் போட்டேன் என்றும், இவ்வழக்கின் சான்று பொருட்களை அடையாளம் தெரியவில்லை என்றும் சாட்சியமளித்து பிறழ்சாட்சியாகியுள்ளார். இவ்வழக்கின் குற்றச்சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.2 ன் சாட்சியம் அரசு

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.16 18:10:28 +0530

தரப்பு வழக்கை உறுதிப்படுத்தும் விதமாக அமையவில்லை. மேலும் 1ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.6ன் சாட்சியம் அரசு தரப்பு வழக்கை நிரூபிக்கும் வகையில் அமையவில்லை. அ.சா.7ன் சாட்சியம் இவ்வழக்கின் புலன் விசாரணை குறித்து மட்டுமே அமைந்துள்ளது. எனவே இவ்வழக்கின் புகார்தாரரின் சாட்சியம் அரசு தரப்புக்கு ஆதரவாக அமையவில்லை என்பதாலும், சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியின் சாட்சியமும் அரசு தரப்பு வழக்கை நிரூபிக்கும் வகையில் அமையவில்லை என்பதாலும், அ.சா.7ன் சாட்சியத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு ஆஜர் எதிரிகளை இவ்வழக்கின் குற்ற சம்பவத்தோடு தொடர்பு படுத்த இயலாது என்று தீர்மானிக்கப்படுகிறது. மேற்கண்ட பரிசீலனையிலிருந்து 1வது எதிரி மீதான இத.ச. பிரிவுகள் 147, 148, 294(b), 307, 326–ன் கீழும், 4 முதல் 7 வது எதிரிகள் மீதான இ.த.ச. பிரிவுகள் 147, 148 294(b), 307 r/w 149, 326 r/w 149 மற்றும் 506(ii)ன் கீழுான குற்றச்சாட்டுக்கள் தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்கள் மூலம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூப்பிக்க தவறியுள்ளதாக தீர்மானித்து 1, 4 முதல் 7 எதிரிகளை இவ்வழக்கில் குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து, 1, 4 முதல் 7 எதிரிகளை இக்குற்ற வழக்கிலிருந்து விடுதலை செய்வதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இவ்வழக்கின் பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது. இவ்வழக்கின் 2 மற்றும் 3வது எதிரிகள் வழக்கு நிலுவையில் இறந்துவிட்டதால் அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் அற்றுபோய்விட்டன.

12. **முடிவாக,** 1வது எதிரி இத.ச. பிரிவுகள் 147, 148, 294(b), 307, 326–ன் கீழும், 4 முதல் 7 எதிரிகள் இ.த.ச. பிரிவுகள் 147, 148 294(b), 307 r/w 149, 326 r/w 149 மற்றும் 506(ii)ன் கீழும் குற்றவாளி இல்லை என முடிவு செய்து ஆஜர் 1, 4 முதல் 7 எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 235(1)–ன் கீழ் இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கின் 2 மற்றும் 3வது எதிரிகள் இறந்துவிட்டதால் அவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் அற்றுபோய்விட்டன.

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.16 18:10:32 +0530

13. இவ்வழக்கில் SCP.No.09/2025 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள சா.பொ.1 மற்றும் சா.பொ.2 சுமார் 45 செ.மீ. நீளமுள்ள அரிவாள் –2 (இரண்டு) மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுத்து விரிவாக்கம் செய்து கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டதை, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, 2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.16 18:10:38 +0530

உதவி அமர்வு நீதிபதி, சீர்காழி.

**சாட்சிகள் சான்றாவணங்கள் பட்டியல்**
**அரசு தரப்பு சாட்சிகள்**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. கோபாலகிருஷ்ணன் |
| அ.சா.2 | திரு. ஹரிகிருஷ்ணன் |
| அ.சா.3 | திரு. சண்முகம் |
| அ.சா.4 | திரு. மகேந்திரன் |
| அ.சா.5 | திரு. அபிமணி |
| அ.சா.6 | திரு. பாண்டியன் |
| அ.சா.7 | திரு. கழனியப்பன் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1 ன் கையெழுத்து |
| அ.சா.ஆ.2 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.5 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | 1 ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.சா.ஆ.7 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.8 | படிவம் 95 |

| | |
|---|---|
| அ.சா.ஆ.9 | காயச்சான்று |
| அ.சா.ஆ.10 | பிரிவு மாறுதல் அறிக்கை |

**அரசு தரப்பு சான்று பொருட்கள்:**

| | |
|---|---|
| சா.பொ.1 மற்றும் சா.பொ.2 | சுமார் 45 செ.மீ. அரிவாள் – 2 (இரண்டு) |

**எதிரிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** –இல்லை–

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.16 18:11:04 +0530

உதவி அமர்வு நீதிபதி, சீர்காழி.

நேரிய /வரைவு தீர்ப்புரை
அமர்வு வழக்கு எண்.67/2022
நாள்– 16.04.2026

1.